**தலைப்பு 123 – நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2021 யூன் 01 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 திசெம்பர் 14 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, இந்த நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென

முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்கியிராமை

அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 06 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், அந்த தேவைப்பாடுகளிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்திட்டங்களில் உள்ள சேமிப்புக்கள் தொடர்பில் அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் தனித்தனியாக காரணங்களை | சேமிப்புகளுக்கான காரணங்கள் ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் உரியதாக தனியாக வரவழைத்து பொழிப்பாக்கப்பட்ட | அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | விடயங்கள் சேமிப்புக்கான காரணங்களாக காண்பிக்கப்பட்டது. | |

**1.6.2 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று – எல்லைகள் விஞ்சப்படல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டிற்காக அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கின் உச்ச செலவின எல்லை ரூபா 7,100,000 ஆன போதிலும் செலவினம் ரூபா 36,364,359 ஆனமையால் உச்ச செலவின எல்லையை விஞ்சி ரூபா 29,264,359 செலவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். 2020 ஆம் ஆண்டில் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் உச்ச செலவின எல்லையை திருத்தியமைப்பதற்காக நிதி அமைச்சின் வரவு செலவுத் திட்ட திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை பத்திரமொன்றின் ஊடாக இந்த எல்லையை திருத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். | முற்பணக் கணக்கு எல்லைகளினுள் பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**1.6.3 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை**

அமைச்சினால் பின்வரும் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) இருப்பு புத்தகம்**<br>நிதிப்பிரமாணம் 751 மற்றும் 763 இன் பிரகாரம் கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்தி செயற்திட்டம் மூலம் பொருள் பதிவேட்டு புத்தகம் பேணப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 751 மற்றும் 763 இன் பிரகாரம் பொருட் பதிவேட்டு புத்தகம் பேணப்பட வேண்டும். |
| **(ஆ) பொறுப்புகள் தொடர்பான பதிவேடு**<br>நிதிப்பிரமாணம் 214 இன் | பதில் | பரிசோதித்து |

| | | |
|---|---|---|
| பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பில் நாள்தோறும் பரீட்சிக்கக் கூடிய வகையில் அனைத்து பொறுப்புக்களும் பொறுப்புக்கள் பதிவேட்டில் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டிருக்கவில்லை. | பட்டியல்களை தாமதமின்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் இடைநிறுத்தப்பட்ட ஒப்பந்தமொன்றிற்கு உரிய முற்பண காப்பீடு மற்றும் செயலாற்றல் பிணை முறியை அறவிட்ட காரணத்தினால் செயற்திட்டத்திற்கு கிடைத்த ரூபா 278.82 மில்லியன் தொகை கடந்த வருடத்தில் வரிசை அமைச்சின் மூலம் மற்றும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பிலான சான்றுப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் சான்றுப்படுத்தல் கடிதத்தினை சமர்ப்பிக்கின்றோம். | சான்றுப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

| | ---------------------------------------------- | ------------------------------- | ------------------------------- |
|---|---|---|---|
| (அ) | 07 மீண்டெழும் செலவின விடயங்களின் ரூபா 1,944,000 ஆன நிதியேற்பாடுகள் மற்றும் 7 மூலதன செலவின விடயங்களின் 1,375,000 நிதியேற்பாடுகள் முறையாக எஞ்சியிருந்தது. | இணங்குகின்றேன். கொவிட் தொற்று நோய் நிலைமையின் அடிப்படையில் அலுவலகத்தின் பணிகள் மட்டுப்படுத்தப்படல் மற்றும் போதியளவான பதவியணி இல்லாதிருத்தல் போன்ற விடயங்களினால் இந்த செலவின விடயங்கள் 100% நிதியேற்பாடு எஞ்சியுள்ளது | வருடாந்த பாதீட்டு மதிப்பீடு நடைமுறைக்கு சாத்தியமான முறையில் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கொழும்பு நகரின் நகர மீளுருவாக்கல் நிகழ்ச்சித் திட்டம் (123-02-07-29-2506-12) இற்காக 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சேமிப்பு ரூபா 985 மில்லியனாக உள்ளபோது 2020 திசெம்பர் 17 ஆந் திகதி அணி இலக்கம் 46 இல் இந்த செலவின விடயத்திற்காக ரூபா 580 மில்லியன் தொகை குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அந்த முழு குறைநிரப்பு மதிப்பீட்டு தொகையும் எஞ்சியிருந்தது. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். | குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி குறித்த பணிக்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | நகர மீளுருவாக்கல் உதவியளிக்கும் செயற்திட்டத்திற்காக 2019 யூலை 22 ஆந் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 200 இற்கு சமனான ரூபா 35,163.7 மில்லியன் தொகை ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கியின் மூலம் நிதியீட்டம் செய்வதற்கு இணக்கம் காணப்பட்டது. மொத்த கடன் தொகையில் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது திசெம்பர் 31 ஆந் திகதியில் எஞ்சிய எடுக்கப்படாத கடன் தொகையான முறையே அமெரிக்க டொலர் | 2020 ஆம் அண்டின் போது அனைத்து செலவினங்களும் Front end fee and Commitment Charges ஆக கூறுகளின் ஊடாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் பெறுமதி அறிக்கையிடப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு நலனேற்படும் வகையில் உடன்படிக்கை கைச்சாத்திட்டு உடன்படிக்கையின் பிரகாரம் உரிய காலப்பகுதியினுள் செயற்திறனாக கொடுத்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தி இந்த விளைவற்ற செலவினத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

36,338,959 மற்றும் அமெரிக்க டொலர் 91,663,933 தொகையில் உடன்படிக்கையின் பிரகாரம் கடப்பாட்டு கட்டணம் (Commitment fees) ஆக முறையே அமெரிக்க டொலர் 196,863 மற்றும் அமெரிக்க டொலர் 496,581 ஆக அமெரிக்க டொலர் 693,444 கூட்டுத் தொகை அல்லது ரூபா 128,002,892 அறவிடப்பட்டிருந்தது.

## 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 94(1) பிரகாரம் நிதியேற்பாடுகளை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தக் கூடாத சந்தர்ப்பத்தில் இரண்டு செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டினை விஞ்சி ரூபா 20,221,653 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | இரு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்திட்ட அலுவலகங்களுக்கு செலுத்த வேண்டிய மின்சாரம், நீர், அலுவலக வாடகை மற்றும் செலுத்த வேண்டிய மதியுரை சேவைகளுக்கு உரிய பட்டியல்களின் காரணமாக இந்த பொறுப்புக்கள் உருவாகியிருந்தன. | நிதியேற்பாட்டினை விஞ்சி கடப்பாடுகள் ஏற்படுத்தப்படக் கூடாது. |

## 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று உருவாக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதாக பிரதான | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டியதுடன் அந்த செயற்திட்டத்தின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அவ்வவ்போது மீளாய்வு செய்து அதன் பிரகாரம் கட்டமைப்பினை ஆக்கபூர்வமாக பேணிச் செல்வதற்குரிய வேறுபாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதும், அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதிபலன்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதாக இருந்த போதிலும் அவ்வாறானதொரு மீளாய்வு மேற்கொண்டதற்குரிய அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| அவதானிப்புகள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 | கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் காணப்படும் RTC உப செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 360,000 தொகையான 03 சூரிய ஒளி தகடுகளுக்கான பற்றாக்குறையொன்று | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் விசாரணைகளை நடாத்தி பொறுப்புக் கூற வேண்டியவர்களை கண்டறிந்து நடவடிக்கை எடுத்தல் மற்றும் பூர்வாங்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2019 ஆம் ஆண்டின் போது இருப்பு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டிருந்த துடன் 2020 ஆம் ஆண்டின் போது 01 அலுவலக கதிரை மற்றும் CMC இன் 01 மடிக் கணினிகள் ஆகியவற்றின் பற்றாக்குறையொன்று காணப்பட்டது. எனினும் இந்த நட்டங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் பூரண அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | அறிக்கைகள் மற்றும் முழுமையான அறிக்கைகளை சமர்ப்பித்தல் |
| (ii) | நிதிப்பிரமாணம் 763(ஆ)(ii) | பொருட்களை அதிகமாக இருப்பில் வைத்திருத்தல், குவித்து வைத்திருத்தல் மற்றும் அழிவடைவதற்கு உரிய வகையில் வைத்திருத்தல் ஆகியவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் கொழும்பு பெரும்பாக அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் 04 இடங்களில் 178 பொருட்கள் குவிக்கப்பட்டு அழிவடைந்தவாறு காணப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் 762 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 757 மற்றும் 760 | மதிப்பாய்வு சபையின் அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள முரண்பாடுகள், | Covid 19 தொற்று நோய் காரணமாக நாடு மூடப்பட்டுள்ளமையால் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு தாமதம் | பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பற்றாக்குறைகள் மற்றும் காணாமல் போனவைகள் எதுவும் காணப்படின் அது தொடர்பில் மதிப்பாய்வு ஆரம்பிக்கப்பட்டு இரு மாதங்களுள் விசாரனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கொழும்பு தலைநகரத்தை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் மற்றும் அனுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது 32 பொருட் பதிவுகளுக்குரிய 109 பொருட்களின் பற்றாக்குறைகள் இனங்காணப்பட்டிருந்த துடன் அந்த பற்றாக்குறைகள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பட்டுள்ளது. | மோசடிகள், பற்றாக்குறைகள் மற்றும் காணாமல் போதல்கள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயற்திட்ட வேலைத் தளங்கள் 06 இல் வருடாந்த பொருள் மெய்மையாய்வுகள் நடாத்தப்பட்டு அந்த அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் மெய்மையாய்வுகளை நடாத்தி அந்த அறிக்கைகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 | அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி | Covid 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக | வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தி | செயற்திட்டத்தின் மற்றும் கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் இனங்காணப்பட்ட பயன்படுத்தப்பட முடியாத 29 உருப்படிகளுக்கு உரிய 139 பொருட்கள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக குழுவினால் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் செயற்பட்டு இறுதி அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நாடு மூடப்பட்டமையால் உரிய நடவடிக்கைகளை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டது. | பிரகாரம் செயற்பட்டு இறுதி அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஈ) | 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | | | |
| | (i) 7.9.11 ஆம் பந்தி | பொறியியலாளரின் மதிப்பீடு மற்றும் விலை கேள்வியின் அளவிடை பத்திர வீதங்கள் ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடுகளுக்கு இடமளிக்க கூடிய சதவீதத்தினை விட வேறுபாடொன்று காணப்படின் அந்த வேறுபாட்டிற்கு உரிய விடயங்கள் தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் திருப்தியடையும் வகையில் அந்த பணிகளுக்கான உப அளவிடை மதிப்பாய்வொன்று | அவதானிப்புடன் இணங்குகின்றேன். | ஒப்பந்தத்திற்கு உரிய தொகையை மதிப்பீடு மற்றும் விலைக் கேள்வியின் அளவிடை பத்திரம் ஆகியவற்றுக்கு இடையே இடமளிக்ககூடிய விலகல் சதவீதத்தினை விட வேறுபாடு காணப்படின் அந்த வேறுபாட்டிற்குரிய ஒப்பந்தம் தொடர்பில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விலைக் கேள்வியாளரிடம் பெற்றுக் கொண்டு மதிப்பீடு செய்ய வேண்டும். எனினும் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 213.62 மில்லியன் பெறுமதியான Shrimapopi Car Park and Erection of interpretation Board Anuradhapura எனும் ஒப்பந்தத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விடைக் கேள்வி மற்றும் பொறியியலாளரின் மதிப்பீட்டு உருப்படிகளின் விலகல் வீதமானது 15 சதவீதத்திற்கும் 216 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அதாவது சுமார் 40 மில்லியன் அளவான விலகலொன்று இடம்பெற்றுள்ளபோது மற்றும் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 140.54 மில்லியனான **Lion Pillour Round board , Railway Plaza** ஒப்பந்தத்தின் அளவிடை உருப்படிகளின் விலகல் சதவீதம் 13 முதல் 90 சதவீதத்திற்கு இடைப்பட்ட விலகல் காணப்படும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் வழிகாட்டியின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | | விகித பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (ii) | 5.4.12 ஆம் பந்தி | வற் வரியினை உள்ளடக்குவதற்காக | அவதானிப்புடன் இணங்குகின்றேன். | பெறுகை வழிகாட்டியின் |

காசு செலுத்துவதன் மூலம் அதற்கடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் அந்தக் கொடுப்பனவுகள் தொடர்பிலான விபரங்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டும். எனினும் கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தினால் நிர்மாணங்களய், பொருட்கள், கட்டுமானங்கள், மதியுரை ஒப்பந்தங்கள் மற்றும் கொள்வனவுகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 359.64 மில்லியனான வற் வரி தொடர்பில் மற்றும் அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தினால் 21 சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்ட ரூபா 5,305,833 வற் வரி தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பிரகாரம் செயற்பட வேண்டும்.

**(உ) நகர மீளுருவாக்கல் செயற்திட்டத்திற்கு உதவியளிக்கும் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கை**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2019 ஏப்ரல் 24 ஆந் திகதிய கடன் உடன்படிக்கையின் பொது நிபந்தனையின் 4.09 ஆம் பிரிவு | நகர மீளுருவாக்கல் செயற்திட்டத்திற்கு உதவியளிக்கும் செயற்திட்டத்தின் நிதி முகாமைத்துவ கட்டமைப்பு அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக பராமரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவ்வாறான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 நிலைமை காரணமாக அந்த தாமதம் ஏற்பட்டது. | செயல் திட்டத்தின் நிதி முகாமைத்துவ கட்டமைப்பு அமைச்சின் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக பராமரிக்கப்பட வேண்டும். |
| (ii) | கடன் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் (சுற்றாடல் மற்றும் சமூக தேவைப்பாடுகள்) | செயல்திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கு முதல் சுற்றாடல் மற்றும் சமூக முகாமைத்துவ திட்டமிடல் சட்டகம் மற்றும் மீள் குடியேற்றுவதற்கான கொள்கைச் சட்டகம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நகர மீளுருவாக்கல் செயற்திட்டத்திற்கு உதவியளிக்கும் செயற்திட்டத்தின் மூலம் அவ்வாறானதொரு கொள்கை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | ஒபசேகரபுர வாதம்பிட்டிய காணிக்காக மீள் குடியேற்ற திட்டங்கள் இரண்டு தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | கடன் உடன்படிக்யையின் பிரகாரம் கொள்கைச் சட்டகம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டம் | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | செயற்திட்டத்தின் மற்றும் நகர செயற்திட்டங்களை தயாரிக்கும் செயற்திட்டத்தின் ஒப்பந்த காலப்பகுதி உள்ளடக்கும் வகையில் நிதி மற்றும் பௌதீக இலக்குகளை முன்னிலைப்படுத்தி காண்பித்து திட்டவட்டமான இலக்குகளை அடைந்து கொள்வதற்காக முழுமையான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறானதொரு திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக மற்றும் ஆண்டின் நடுப்பகுதியில் நிகழ்ச்சித் திட்டம் இரத்துச் செய்யப்பட்ட காரணத்தினால் இது இடம்பெற்றிருக்கவில்லை. | விரிவான செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | செயற்திட்டத்தின் மதியுரை சேவைகள் கம்பனியால் தாமதத்தின் பின்னர் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டமை மற்றும் அந்த திட்டங்களின் அடிப்படையில் பெறுகை நடவடிக்கைகள் கால அடிப்படையில் மேற்கொள்ள முடியாதிருந்தமை போன்ற காரணங்களால் யாழ்ப்பாண நகரினுள் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட ரூபா 3,380.70 மில்லியன் (ஐ.அ.டொ. 19.66 மில்லியன்) பெறுமதியான 09 உப செயற்திட்டங்களின் பணிகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் இடைநிறுத்தப்பட்டிருந்த காரணத்தினால் அவற்றிலிருந்து எதிர்பார்த்த நலன்களை அடைந்து | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன் | குறித்த உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியிடமிருந்து தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ள முடியாதிருந்தது. | | |
| (iii) | செயற்திட்டத்தினால் இலங்கை மத்திய வங்கியில் பேணப்படும் விசேட டொலர் கணக்கின் 2020 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 797.85 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 4.39 மில்லியன் மீதியொன்று காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக ரூபா 2,544.13 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொ 13.80 மில்லியன் மீளாய்வாண்டின் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் நலிவான நிதி எதிர்வு கூறல் காரணமாக 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 732.60 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொ. 3.93 மில்லியன் விசேட டொலர் கணக்கில் மிகையாக காணப்பட்டது. | வெளிநாட்டு நிதிகளுடனான செயற்திட்டங்களின் போது காலாண்டு ரீதியில் பணம் பெற்றுக் கொள்வதற்காக IUFR சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தயாரிப்பு காலத்தில் இதற்காக 4 முதல் 4.5 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் செலவிடப்படும். அதன் காரணமாக டொலர் கணக்கில் 3 மாதங்கள் முதல் 4 மாதங்கள் வரை பணம் காணப்படும். | வெளிநாட்டு செயற்திட்டங்களின் நிதி எதிர்வு கூறல் சரியாக மேற்கொள்ளப்பட்டு உயர் நிதி மற்றும் பௌதீக செயலாற்றலை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நகர மீளுருவாக்கல் செயற்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் செயற்திட்டம் | | |
| (i) | செயற்திட்டத்தின் ஸ்ரேடியம், ஒபேசேகரபுர மற்றும் அப்பல்வத்த செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் சுற்றாடல் மதியுரைக் குழுவின் அங்கீகாரம் மற்றும் விமான, தீ, நீர் மின்சாரம், மற்றும் நீர் வழங்கல் பணிகளுக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாது நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்காக முற்பணமாக 2021 ஏப்ரல் 06 ஆந் திகதி ரூபா 984 மில்லியன் குறித்த | 2021 யூன் 15 ஆந் திகதி அளவில் ஸ்டேடியம், ஒபசேகர செயற்திட்டங்களின் மூலம் சுற்றாடல் மதியுரைக் குழுவின் அறிக்கையினை நிறைவு செய்து நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.1 இன் பிரகாரம் செயற்திட்டங்கள் உரிய காலத்தினுள் நிறைவு செய்வதற்கு முன் பெறுகை நடைமுறை செயற்திறனாக திட்டமிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்த்க காரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | செயல்திட்டத்தினை மீள அபிவிருத்தி செய்யும் ஒப்பந்த செயற்திட்ட திட்டத்தின் பிரகாரம் 04 காணித் துண்டுகள் (37.5 ஏக்கர்) பரப்பளவான 2020 ஆம் ஆண்டினுள் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 மே மாதத்தின் இறுதி வரையிலும் அந்தக் காணிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு மீள குடியமர்த்தும் பணிகள் இடம்பெற்றிருக்கவில்லை. | தெரிவு செய்யப்பட்ட 10 காணிகளின் 3 காணிகளை அபிவிருத்தி செய்வதற்காக தற்போது பெறுகை பணிகள் இடம்பெறுகின்றன. அபிவிருத்திக்காக தொடர்புடைய நிபந்தனைகள் தயாரிக்கப்பட்டு AIIB இற்கு மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.1 இன் பிரகாரம் செயற்திட்டம் உரிய காலத்தினுள் நிறைவு செய்வதற்கு முன்பெறுகை நடைமுறை செயற்திறனாக திட்டமிடப்பட்டிருக்க வேண்டும். |
| (இ) | அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த செயற்திட்ட காலப்பகுதியை உள்ளடக்கும் வகையில் எதிர்பார்த்த இலக்குகளை உள்ளடக்கிய ஒப்பந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மற்றும் பாதீட்டு தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் விபரங்களை திட்டமிடுவதற்கான மதியுரைகள் தாமதமடைந்துள்ளமையால் 2020 ஆம் ஆண்டின் இறுதியளவில் நுழைவு செயற்திட்ட காலப்பகுதி உள்ளடங்கும் வகையில் விரிவான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயல்திட்டத்தினை நிறைவு செய்ய இயலாது. எவ்வாறான போதிலும் அது தயாரிக்கப்படவில்லை. | எதிர்பார்த்த காலத்தினுள் ஒட்டுமொத்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று மற்றும் பாதீட்டு தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------- | ----------------------------- | ----------------------------- |
| (அ) | கேந்திர நகரங்கள் | | |

அபிவிருத்தி செயற்திட்டம்
----------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | செயற்திட்டத்தின் வெள்ளநீர் கட்டுப்பாட்டிற்காக ஆண்டினுள் காலி நகர அபிவிருத்தியின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய 16 கால்வாய் கட்டமைப்புக்களின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் அதற்கு தேவையான காணிகளை சுவீகரித்தலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை. இந்த நிலைமையின் காரணமாக செயற்திட்டத்தின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | காலி பிரதேசத்தின் நீரேந்து பிரதேசங்கள் 8 இற்காக காணிகளை சுவீகரிக்கும் பணிகள் இடம்பெற்றவாறு உள்ளது. இனங்காணப்பட்ட காணிகளை சுவீகரித்தல் 6 குறுக்கு கால்வாய்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | செயற்திட்டத்தின் பணிகள் திட்டமிட்டவாறு எதிர்பார்த்த நலன்களை பெற்றுத் தரக் கூடிய வகையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) | செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டினுள் பணிகள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 3,198.56 மில்லியன் பெறுமதியான 10 செயற்திட்டங்களின் பௌதீக செயலாற்றல் 50 சதவீதத்தினை விட குறைவான பெறுமதியை கொண்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டிய ரூபா 16.08 மில்லியனான ஒரு செயற்திட்டத்தின் எதுவித பௌதீக செயலாற்றலும் அண்மிக்கப்பட்டிருக்க வில்லை. | திரவத்தன்மை பிரச்சினைகள் உள்ள 04 ஒப்பந்ததாரர்கள் காணப்பட்டதுடன் பிரதானமாக 2020 ஆம் ஆண்டின் போது நாட்டினுள் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் நாடு மூடப்பட்ட நிலைமைகளின் அடிப்படையில் ஏனைய ஒப்பந்ததாரர்களின் செயலாற்றலும் குறைவடைந்தது. | - மேற்படி - |
| (iii) | செயற்திட்டத்தின் மதியுரை நிறுவனத்தின் சாத்தியவள | நீரேந்து பிரதேசங்களுக்காக உத்தேச அனைத்து | சாத்தியவள கற்கை அறிக்கைகளின் |

| | | | |
|---|---|---|---|
| | கற்கைகள் அறிக்கையொன்றின் மூலம் காலி நகரத்தின் வெள்ளநீர் கட்டுப்பாட்டிற்காக மொறகொட கால்வாயின் இருபுறமும் 10 நீரேந்து இடங்களை தாபிப்பதற்கு இனங்காணப்பட்டிருந்த போதிலும் அந்த நீரேந்து பிரதேசங்களுக்குரிய அந்த காணிகளை சுவீகரிக்கும் பணிகள் கடந்த வருடத்தின் இறுதியளவில் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதற்காக ஈர வலய முகாமைத்துவ திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | காணிகளும் தனிப்பட்ட உரித்துரைடய காணிகள் என்பதனால் அவற்றை சுவீகரிக்கும் நடைமுறையை நிறைவு செய்யாது ஈரவலயமாக முகாமை செய்வதற்கு அரசிற்கு அதிகாரம் இல்லாதிருந்ததுடன் PMU, SCDP ஈரவலய முகாமைத்துவ திட்டம் தயாரிக்கும் நடைமுறை நிறுத்தப்பட்டிருந்தது. | பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம்<br>----------------------------------------------- | | |
| (i) | மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 877 மில்லியனான அனுராதபுரம் சந்தைக் கட்டிடம் மற்றும் பல்நோக்கு வாகன தரிப்பிடத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம், அநுராதபுரம் நகரத்தில் காணப்படும் வேலைப்பளு மற்றும் நிர்மாணங்களை மேற்கொள்ளும் போது மனஉளைச்சலுக்கு உள்ளாகும் தரப்பினருக்கு நட்டஈடு செலுத்த நேர்ந்தமை போன்ற விடயங்களின் அடிப்படையில் நிறுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் செயற்திட்டம் உரிய சாத்தியவள கற்கையொன்றினை மேற்கொள்ளப்பட்ட செயல் திட்டம் ஒன்று என்பது அவதானிக்கப்பட்டது. | சந்தை மற்றும் பல்நோக்கு வாகனத் தரிப்பிடத்தை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியவள கற்கை மற்றும் முதலீட்டுத் திட்டம் முதலீட்டாளரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் பொதுமக்களுக்கு ஏற்படக் கூடிய அசௌகரியங்கள் சுற்றாடல் முகாமைத்துவ திட்டத்தின் மூலம் முகாமை செய்ய இயலும். நிதியப் பிரதிநிதியின்/AFD கருத்தில் கொள்ளப்பட்டமையால் உப செயற்திட்டம் கைவிடப்பட்டது. | செயல் திட்டமொன்று ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவள கற்கையொன்றினை மேற்கொண்டு கிரய நலன்கள் பகுப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | செயற்திட்டத்திற்காக | அமைச்சரவையினால் | உடன்படிக்கையின் |

| | | | |
|---|---|---|---|
| | மதியுரை சேவையினை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 212.66 மில்லியன் (1.18 மில்லியன் யூரோக்கள்) இற்காக 2017 ஆகஸ்ட் 29 ஆந் திகதியின் மதியுரை நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதியளவிலும் வழங்கப்பட வேண்டியதாக இருந்த மதியுரை சேவைகளின் இறுதி அறிக்கை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிராததுடன் மதியுரை ஒப்பந்த காலம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் மீளாய்வாண்டிற்கு உரிய ரூபா 42.11 மில்லியன் உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் இறுதி வரையில் மதியுரை கம்பனிக்கு ரூபா 100.32 மில்லியன் செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. மதியுரை சேவைகள் உடன்படிக்கையின் 46.2 பிரிவின் பிரகாரம் மதியுரை அறிக்கைகள் 03 வழங்கும் தாமதக் காலம் அதிகரித்தமையின் அடிப்படையில் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடக் கூடிய உச்ச தாமதக் கால கட்டண எல்லையாக ரூபா 21.26 மில்லியனை அறவிடுவதற்கும் செயல்திட்டம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நியமிக்கப்பட்ட மதியுரை பெறுகைகள் குழு (CACPC) இனால் 2021 மார்ச் 31 வரையான காலம் நீடிப்பிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மதிப்பீடு நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் திரவத்தன்மை நட்டங்கள் கருத்தில் கொள்ளல் இயலும். ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விநியோகங்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பிரகாரம் அறவிடக் கூடிய உச்ச தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு அந்த சந்தர்ப்பத்திலேயே நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | மேற்கூறியவாறு உரிய திகதியில் அறிக்கையினை வழங்காது உள்ள போது 2019 ஆம் ஆண்டின் போது | கழிவு நீர் முகாமைத்துவத்திற்காக சாத்தியவள கற்கை (ஆரம்ப ஒப்பந்தத்திற்கு சேர்த்தல்) | மதியுரை சேவைகளை பெற்றுக் கொள்ளும் போது முன் |

| | | | |
|---|---|---|---|
| | அந்த கழிவு நீர் முகாமைத்துவ மதியுரை சேவைகளை பெற்றுக் கொள்வதற்காகவும் ரூபா 18.62 மில்லியனான (0.11 மில்லியன் யூரோக்கள்) பெறுமதிக்கு அந்த மதியுரை கம்பனியுடன் மீண்டும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. | 2020 நிறைவடையும் போது நிறைவு செய்யப்பட்டுள்ள விபரங்கள் திட்டத்திற்குரிய அனைத்து விநியோகங்கள் 2021 மார்ச் இறுதியளவில் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் சில விநியோகங்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் 2021 மே மாதத்தின் போது செயலாளரினால் ஏனைய பெறுகைகள் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. EOT மதிப்பீடுகள் இடம்பெற்றவாறு உள்ளன. | சேவைகள் தொடர்பில் உரிய முறையில் தேடிப்பார்க்க வேண்டியமை. |
| (இ) | கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்தி செயற்திட்டம் வெள்ளநீர் கட்டுப்பாடு மற்றும் நீர் முகாமைத்துவ நிலையத்திற்கான கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் 2021 மே 05 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்படாமையின் காரணத்தால் செயல்திட்ட காலம் நிறைவடைவதற்கு முன்னர் சுஊவு கட்டமைப்பு உரிய இடத்தில் தாபிக்க முடியாதுள்ளமை அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டத்தின் பணிகள் திட்டமிட்டவாறு மேற்கொள்ளப்பட்டு எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நகர மீளுருவாக்கலிற்கு உதவியளிக்கும் செயற்திட்டம்<br>--------------------------------------------- | | |
| (i) | செயற்திட்டத்தின் அப்பல்வத்த வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் 700 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்ததாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு ஆரம்ப முற்பணமாக ரூபா 155.6 மில்லியன் 2021 சனவரி 26 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்த போதிலும் | செயற்திட்டத்தினை நிறைவு செய்ய வேண்டிய காலப்பகுதியில் அது தாக்கமளிக்கக் கூடும். இந்த தாமதம் கொவிட் 19 காரணத்தால் நிகழ்ந்ததாகும். | நிர்மாணச் செயற்திட்டங்கள் உரிய நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளப் படுவதாக மதியுரையாளர்களின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயற்திட்டத்திற்காக மதியுரையாளர்கள் தெரிவு செய்யப்பட்டிராமையால் மதியுரையாளர்களின் கண்காணிப்பின்றி செயற்திட்டம் ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை. | | |
| (ii) செயற்திட்டத்தின் செயல் நடவடிக்கைத் திட்ட்தின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர்மாதம்பிட்டிய வீடமைப்புச் செயற்திட்டத்தின் 700 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்ததாரர்கள் மற்றும் மதியுரை நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் 2021 ஏப்ரல் 08 ஆந் திகதி வரையிலும் அந்த செயற்திட்டத்திற்காக ஒப்பந்ததாரர்கள் மற்றும் மதியுரை நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2021 மார்ச் 16 ஆந் திகதி நிபுணத்துவ சேவைகளுக்கான நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டது. செயற்திட்டம் தொடர்பில் உள்ளக நிர்மாண நிபுணர்கள் மற்றும் பொறியியலாளர்களினால் ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டன. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 உத்தேச அடைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ---------------------------------------------- | ------------------------------ | ------------------------------ |
| (அ) அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 10,025 மில்லியனுக்கு சமனான 62.4 மில்லியன் யூரோக்கள் ஆவதுடன் அவற்றுள் ரூபா 8,354 மில்லியனுக்கு சமனான 52 மில்லியன் யூரோக்களை வழங்குவதற்கு பிரன்ஞ் | அவதானிப்புடன் இணங்குகின்றேன். செயல் திட்டம் 2020 நிதியாண்டு நிறைவடையும் போது AFD இடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஆரம்ப முற்பணத்தில் (ரூபா 204.25) 87 சதவீதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் 2021 மே அளவில் 2 ஆவது மீளுருவாக்கல் முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. பாதீட்டு | மதியுரை சேவைகளின் இறுதி அறிக்கையை துரிதமாக பெற்று செயற்திட்ட பணிகளை துரிதப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி முகவர் நிறுவனம் வழங்கியிருந்தது. செயற்திட்டத்தின் பணிகள் 2016 திசெம்பர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் 4 வருடங்கள் கடந்த பின்னர் அதாவது 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த ஒதுக்கீட்டில் 3 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 308.84 மில்லியனுக்குச் சமனான 1.84 யூரோ மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான அரச பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட ரூபா 228 மில்லியனில் மீளாய்வாண்டினுள் ரூபா 125.54 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிதியேற்பாடுகளில் எதிர்பார்த்த நிர்மாணங்களை இனங்கண்டு வரிசை அமைச்சின் கீழ் உள்ள செயற்திட்ட SCDP இற்கு வரிசை அமைச்சின் அங்கீகாரத்துடன் மாற்றப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அநுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் இரண்டாவது உப செயற்திட்டத்தின் பணிகள் 2021 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிறைவு செய்யப்படல் வேண்டிய போதிலும் இனங்காணப்பட்ட ரூபா 6,883.25 மில்லியன் பெறுமதியான 10 சிறிய செயற்திட்டங்களின் பெறுகை நடவடிக்கைகள் 2021 மே மாதம் வரையிலும் நிறைவு செய்யப்படாதிருந்ததுடன் காணிகளை சுவீகரித்தல் மற்றும் நட்டஈடு செலுத்தும் பணிகள் 2021 திசெம்பர் வரையிலும் தாமதமடைந்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. | 2020.12.31 அளவில் இரு ஒப்பந்த பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு பணி பொதியின் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.<br><br>2021 யூன் மாதமளவில் செயல்திட்டத்தின் மூலம் ரூபா 947.18 பெறுமதியுடனான 4 பொதிகள் கையளிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 2 பொதிகளுக்காக பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பொதிகள் காணிகளை சுவீகரித்தல் மற்றும் மீள குடியேறுதல் பணிகள் உள்ளடங்கலாக விலைக் கேள்வி ஆரம்ப கட்டத்தின் கீழ் காணப்படுகின்றது. | செயற்திட்டத்தின் பணிகளை நாளதுவரையாக திட்டமிட்டவாறு நிறைவேற்று வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | Covid 19 தொற்று நோய் நிலைமை செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு பாதகமான முறையில் தாக்கமளித்துள்ளமையை தாழ்மையுடன் கருத்தில் கொள்ளவும். | |

### 3.4 எதிர்பார்த்த பெறுபேறுகளை (Outcome) பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் பணிகளை ஆக்கபூர்வமாக முகாமை செய்யாத காரணத்தினால் ரூபா 3,616.18 மில்லியன் (ஐ.அ.டொ. 20.19 மில்லியன்) கையளிக்கப்பட்ட 05 உப ஒப்பந்தங்களின் பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தன. செயற்திட்டத்தின் பணிகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிறைவடைய உள்ளமையினால் அத்திகியில் நிர்மாணப் பணிகளை நிறைவேற்ற முடியாத 8 ஒப்பந்தங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 360.64 மில்லியனால் குறைக்கப்பட்டு அதன் விடயப் பொறுப்பு திருத்தியமைக்கப்பட்ட மையால் அதிலிருந்து எதிர்பார்த்த பிரதிபலன்களை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். ஒப்பந்ததாரரின் திரவத் தன்மை பிரச்சினைகளின் காரணமாக கண்டி பிரதான வீதி செயற்திட்டங்கள் இரண்டினை கையளித்தல் இரத்துச் செய்யப்பட்டதுடன் திட்டமிடுதலிலான பிரச்சினைகள் மற்றும் காணிகளை சுவீகரிக்கும் பிரச்சினைகள் காரணமாக மத்திய கால்வாய் 1 மற்றும் 2 செயற்திட்டங்கள் மட்டுப்படுத்த நேர்ந்தது. காலி மொறகொட கால்வாய் செயற்பாடு நலிவடைந்தமை காரணமாக இரத்துச் செய்வதற்கு நேர்ந்திருந்தது. | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய வகையில் செயற்திட்டங்கள் ஆக்கபூர்வமாக முகாமை செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக கடன் | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியை உச்ச |

| | | |
|---|---|---|
| வழங்கும் முகவரகத்தின் மூலம் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 213 மில்லியனுக்குச் சமனான ரூபா 27,890.22 மில்லியனான மொத்த தொகையில் 32 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய அமெரிக்க டொலர் 68.4 மில்லியன் அதாவது ரூபா 10,513.4 மில்லியன் மற்றும் அரச நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிதியளிக்கப்படும் ஐக்கிய அமெரிக்க டொலர் 108 மில்லியனுக்கு சமனான ரூபா 14,141.52 மில்லியனான மொத்த நிதியேற்பாட்டின் 60.8 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய அமெரிக்க டொலர் 65.7 மில்லியனுக்குச் சமனான ரூபா 10,105.06 மில்லியன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிறைவடையும் செயற்திட்ட காலத்தினுள் பயன்படுத்துவதற்கான இயலுமை சந்தேகத்திற்குரியது என்பது அவதானிக்கப்பட்டது. | | செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 செயற்திட்டத்தை நிறைவு செய்யாது கைவிட்டுவிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டம் | | |
| செயற்திட்டத்தை மதிப்பிடப்பட்ட பெறுமதி | தாமதங்கள் மற்றும் ஏற்றுக் கொள்ளல் | மதியுரை நிறுவனத்திடமிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 152.47 மில்லியனான யாழ்ப்பாணத்தின் பழைய கச்சேரி கட்டிட வளாகத்தை பாதுகாப்பதற்காக திட்டங்கள் மற்றும் நிர்மாண கண்காணிப்பு மதியுரை சேவைக்காக மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 8.42 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய காலச் சட்டகத்தினுள் வழங்காமை காரணத்தால் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 485 மில்லியனான பழைய கச்சேரி கட்டிடத்தின் நிர்மாண செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. | நடைமுறையிலான தாமதங்கள், விசேடமாக தொல்பொருளியல் திணைக்களத்தின் வெளியீட்டினைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட இரு விடயங்கள் காரணமாக மதியுரையாளருக்கு கையளிக்கும் காலச் சட்டகமொன்றாக சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. அதனால் பழைய கச்சேரி கட்டிடத்தின் திட்டத்தை குறைப்பதற்காக மதியுரை ஒப்பந்தத்தின் விடயப் பரப்பு திருத்தப்பட்டுள்ளது. | தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கும் செயற்திட்ட பணிகளை துரிதப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | **UPPF** செயற்திட்டம் - குருணாகலை, தம்புள்ளை, திருகோணமலை மற்றும் இரத்தினபுரி நகர்களின் செயற்திட்டங்களை இனங்காணும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டம் | | |
| (i) | இந்த செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா 1,090.98 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொ. 5.74 மில்லியனாவதுடன் அவற்றுள் ரூபா 883.88 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொ. 4.65 மில்லியனான கடனை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் பணிகளை 2019 மார்ச் 06 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2021 மார்ச் 31 ஆந் திகதியளவில் நிறைவு செய்ய எதிர்பார்த்திருந்தது.<br><br>அந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் | திறைசேரியினால் செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டதுடன் கொவிட் தொற்றுநோய் மற்றும் நாடு முடக்கப்பட்டமை ஆகிய காரணங்களினால் 2020 திட்டத்தினை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட கடன் கால எல்லையினுள் சரியாக திட்டமிடப்பட்ட பணிகளை பூர்த்தி செய்து எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் அரசிற்கு நட்டமொன்று ஏற்படாதவாறு செயற்படவும் வேண்டும். |

ஒதுக்கப்பட்ட நிதியங்களிலிருந்து 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் 29 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 255.40 மில்லியனுக்குச் சமனான ஐக்கிய அமெரிக்க டொலர் 1.32 மில்லியனான செயற்திட்டத்தின் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய **ER/AB/US/01(vol-i)** ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் பணிகளை நிறுத்தப்பட்டமையின் அடிப்படையில் அந்த கடன் தொகை நாட்டிற்கு கடன் சுமையாக மாத்திரம் அமைந்துள்ளது.

(ii) இந்த செயற்திட்டத்தின் மதியுரை நிறுவனத்தினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டவாறு மீளாய்வாண்டினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 30 மதியுரை அறிக்கைகள் 2020 ஒக்தோபர் மாதமளவிலும் வழங்குவதற்கு தவறியிருந்தது. 01-13 மாதங்கள் வரையான தாமதம் நிலவிய போதிலும் தாமதக் கட்டணமொன்றை மதியுரை நிறுவனங்களிலிருந்து அறவிடுவதற்கு உரிய சட்ட ஏற்பாடுகளும் மதியுரை சேவை உடன்படிக்கையின் உள்ளடங்கியிருக்க வில்லை.

3 மதியுரை சேவை நிறுவனங்களுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா

செயற்திட்டத்தின் மூலம் இதுவரையிலும் மதியுரை சேவைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் திரவத் தன்மைக்கு பங்கம் ஏற்படுவதனை குறைப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் மதியுரை ஒப்பந்தத்தின் எவ்வித பிரிவுகளும் காணப்படவில்லை. இது காலத்தினை அடிப்படையாகக் கொண்டு மதியுரை ஒப்பந்தமாகும்.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட கடன் காலப்பகுதியினுள் சரியாக திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவு செய்து எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மற்றும் அரசாங்கத்திற்கு நட்டமொன்று ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| 214.88 மில்லியன் உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்ட ரூபா 313.05 மில்லியன் செலவினம் செயற்திட்ட பணிகள் நிறுத்தப்பட்டமையின் அடிப்படையில் விளைவற்ற செலவினமாகியுள்ளமை அவதானிக்கப்பட்டது. | | |

**3.6 செயற்திட்டத்தை நிறைவு செய்வதிலான தாமதங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டம் | | |
| (i) செயல்திட்டம் 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டக் காலம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மேலும் 02 வருடங்கள் நீடிப்புச் செய்யப்பட்டிருந்தன. செயல்திட்டத்தின் அபிவிருத்தி நோக்கங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செயல்திட்டத்தின் அபிவிருத்தி பணிகளின் | ஆரம்பக் கட்டத்தில் திட்டமிடல் மற்றும் காணிகளை சுவீகரித்தல் போன்ற காரணங்களால் ஆரம்ப நிதியத்திற்காக செயற்திட்டக் காலம் 2019 ஆம் ஆண்டு முதல் 2021 வரை நீடிக்கப்பட்டிருந்தது. செயல்திட்டத்தின் KMTT பணிகள் அகற்றப்படல் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 92.0 மில்லியன் இரத்துச் செய்யப்படுதல் எதிர்பார்த்த நலன்கள் குறைவடைந்தமைக்கு | திட்டத்தின் பிரகாரம் உச்ச எண்ணிக்கையிலான நலனாளிகளுக்கு நலன்களை வழங்கும் வகையில் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையிலான நலன்களை பெற்றுக் கொள்ளக் கூடிய மக்கள் 650,000 ஆன போதிலும் உள்ளபடியாக நலன்களை பெறுவோரின் எண்ணிக்கை 400,000 வரையான குறைவான பெறுமதியினை கொண்டிருந்தது. | பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | |
| (ii) | ரூபா 311 மில்லியன் பெறுமதியான 04 மதியுரை சேவை ஒப்பந்தங்களின் உடன்படிக்கை காலம் நிறைவடைந்திருந்த போதிலும் மதியுரை சேவைகள் நிறைவு செய்யப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் நிறைவு செய்யப்படாத பணிகளுக்காக தாமதக் கட்டணம் (Liquidity Damages) அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நான்கு மதியுரை சேவைகளை திட்டவட்டமாக குறிப்பிடாத காரணத்தினால் அது தொடர்பில் கருத்து தெரிவிக்க முடியாது. | தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நகர மீளுருவாக்கல் செயற்திட்டத்திற்கு உதவியளிக்கும் செயற்திட்டத்தினை மீள அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சுமார் 111.5 ஏக்கர்கள் பரப்பளவான 11 காணித் துண்டுகள் ஆகும். ஒட்டுமொத்த செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் திட்டத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட 11 காணித் துண்டுகளில் 04 காணிகள் 2020 ஆம் ஆண்டினுள் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள 37.5 ஏக்கர் அளவுடையதாகும். எவ்வாறான போதிலும் 2021 மே மாதத்தின் இறுதி வரையிலும் நிறைவு | தெரிவு செய்யப்பட்ட 10 காணிகளின் 3 காணிகள் அபிவிருத்தி செய்வதற்காக தற்போது பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு உள்ளது. அபிவிருத்திக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள நிபந்தனைகள் தயாரிக்கப்பட்டு AIIB இற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. **PPP** மாதிரியின் கீழ் காணிகளை அபிவிருத்தி செய்யவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் காணிகளில் குடியேற்றுதல், வெற்று காணிகளின் அபிவிருத்தி பணிகளுக்காக மாத்திரம் அல்லாததுடன் அரசின் வெற்றுக் காணிகளை பயன்படுத்துதல் செயற்திறனை உச்சப்படுத்துதல் | திட்டத்தின் பிரகாரம் காணிகளை அபிவிருத்தி செய்யும் பணிகளை நிறைவு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருக்கவில்லை. விடிவிப்பதற்கு முன்னர் காணியில் உத்தேசிக்கப்பட்டுள்ள மீளக் குடியமர்த்தும் வீட்டு உரிமையாளர்கள் இனங்காணப்பட்டு 2020 ஆம் ஆண்டளவில் நிறைவு செய்வதற்குரிய திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியதாக இருந்தது. எவ்வாறான போதிலும் இது 2021 யூன் 10 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | ஆகியவற்றுக்காக காணியின் அபிவிருத்திக்காக AIIB இற்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | |

## 3.7 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயன்முன்னேற்றத்தினை பெற்றிராத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டம்** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதியளவிலும் கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்கு தவறியிருந்தமையினால் உலக வங்கிக்கு வழங்குவதற்கு இணங்கிய ஐ.அ.டொலர் 202 மில்லியனான கடன் தொகையில் ரூபா 92 மில்லியன் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக செயல் திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்துள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கண்டி பல்நோக்கு போக்குவரத்து முனையம் (KMTT) முழு நிறைவு செய்வதற்கு காலம் போதாதிருந்ததன் காரணமாக ஐக்கிய அமெரிக்க டொலர் 202 மில்லியன் தொகையில் ஐக்கிய அமெரிக்க டொலர் 65 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.<br><br>எவ்வாறான போதிலும் KMTT புதிய செயற்திட்டமொன்றாக 2021 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் திட்டமிட்டவாறு எதிர்பார்த்தல் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | செயற்திட்டத்திற்கான கடன் வழங்கும் உலக வங்கியினால் ஒதுக்கப்பட்ட ரூபா 27,507 | அறிவிக்கப்பட்ட கருத்துடன் இணங்க முடியாது. ஐக்கிய அமெரிக்க டொலர் 147.0 | குறை பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றலுக்கான |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொ. 202 மில்லியன் மொத்த நிதியங்களிலிருந்து செயற்திட்டங்களின் பணிகளை ஆரம்பிக்கும் திகதியிலிருந்து 6 ½ வருடங்கள் கடந்த பின்னர் அதாவது 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மொத்த ஒதுக்கங்களின் 36 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 11,645.64 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொ. 72.61 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | மில்லியனுக்காக முதல் நிதி ஆரம்ப திகதி 2014 யூலை 01 ஆக காணப்படுவதுடன் மேலதிக நிதி அமெரிக்க டொலர் மில்லியன் 55 தொகையானது 2016/10/19 முதல் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றலை நடைமுறைப்படுத்தும் இலக்கிற்கு அண்மிக்காத காரணத்தால் நிதியத்தினை ஒதுக்குதல் குறைவடைவதற்கு காரணமாக அமைந்திருந்தது. | காரணங்களை கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அனுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் | | |
| (i) | செயல்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டின் போது பிரன்ஞ் அபிவிருத்தி முகவர் நிறுவகத்தினால் (AFD) ரூபா 204.25 மில்லியனுக்கு சமனான 1.27 மில்லியன் யூரோக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது மீளாய்வாண்டின் போதும் எதுவித முற்பணத் தொகையும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பண தொகையில் கடந்த வருடத்தின் இறுதியில் எஞ்சியிருந்த ரூபா 94.37 மில்லியனுக்கு சமனான 0.58 மில்லியன் யூரோக்களில் ரூபா 26.50 மில்லியனுக்கு சமனான 0.17 மில்லியன் யூரோக்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்தது. | கருத்துரையுடன் இணங்குகின்றேன். எவ்வாறான போதிலும் செயற்திட்டம் 2020 ஆம் நிதியாண்டு நிறைவடையும் போது AFD இடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஆரம்ப முற்பணத்தின் (ரூபா 204.25) 87 சதவீதம் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் 2021 மே வரையிலும் 2 ஆவது மீளுருவாக்கல் முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. | நிதியத்தின் குறைப் பயன்பாட்டிற்கு காரணங்களை கண்டறிந்து செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் உரிய காலத்தினுள் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | ரூபா 336.25 மில்லியன் | கருத்துரையுடன் | திட்டங்கள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான 4 உப ஒப்பந்தங்கள் அநுராதபுர நகர அபிவிருத்தி செயற்திட்டத்தினால் 2020 யூலை மாதம் ஒப்பந்ததாரர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டம் 2021 யூலை நிறைவடையவிருந்தது. எனினும் 2021 மார்ச் மாதமளவில் அந்த 03 செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 10 சதவீதத்திற்கும் 30 சதவீதத்திற்கும் இடைப்பட்ட உயர் பெறுமதியில் காணப்பட்டது. ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட திட்டங்கள் மற்றும் அளவிடைப் பத்திரங்களின் பொருண்மையான தவறுகள் காணப்பட்டமை இந்த நிலைமைக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. இந்த திட்டமிடலிலான குறைபாடுகள் காரணமாக ஒப்பந்தக்காரர்கள்மேலதிக கிரய மதிப்பீட்டினை சமர்ப்பித்திருந்தனர். அதனால் நிர்மாணப் பணிகளில் உள்ள உண்மையான கிரயம் மதிப்பிடப்பட்டுள்ள கிரயத்தினை விஞ்சக் கூடுமென தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன். DDS மதியுரையாளரின் ஒத்துழைப்புடன் UDA கட்டிட வடிவமைப்பாளரினால் PIU தொழில்நுட்ப பதவியணியுடன் இந்த பிரச்சினைகள் தீர்க்கப்பட்டது. | அளவிடைப் பத்திரங்களை தயாரித்த மற்றும் கண்காணித்த மற்றும் அங்கீகாரத்தை வழங்கியவர்களின் மேலதிகக் கிரயத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | கடன் வழங்கும் முகவரினால் ஒதுக்கப்பட்ட ரூபா 8,354.22 மில்லியனுக்கு சமனான 52 மில்லியன் யூரோக்களை கொண்ட மொத்த நிதியத்திலிருந்து அனுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் பணிகளை ஆரம்பிக்கும் திகதி முதல் 4 வருடங்கள் கடந்திருந்த பின்னர் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த ஒதுக்கீடுகளின் 3 | கருத்துரையுடன் இணங்குகின்றேன். எவ்வாறான போதிலும் செயற்திட்டம் 2020 நிதி ஆண்டு நிறைவடையும் போது AFD இடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஆரம்ப முற்பணத்தின் (ரூபா 204.25) 87 சதவீதம் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் 2021 மே மாதமளவில் 2 ஆவது மீளுருவாக்கல் முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. | நிதியத்தின் குறைப் பயன்பாட்டிற்கு காரணங்களை கண்டறிந்து செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் உரிய காலத்தினுள் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 308.84 மில்லியனுக்கு சமனான 1.84 யூரோ மில்லியன்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. | | |

## 3.8 ஏனைய அவதானிப்புகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது நிலைபேறான நகர அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் அனுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் ஆகியவற்றுக்கான பாதீட்டு மதிப்பீடுகளின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளின் முறையே ரூபா 50 மில்லியன் மற்றும் ரூபா 35 மில்லியன் எனுமாறு ரூபா 85 மில்லியன் நி.பி. 66 இன் கீழ் கேந்திர நகரங்கள் அபிவிருத்தி பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். தேவையான மேலதிக நிதி ஒதுக்கப்பட்டமையால் எம்மால் குறைப் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டள்ள AIUDP மற்றும் நகர செயற்திட்ட தயார்படுத்தல் வசதிகள் செயற்திட்ட நிதிக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. | நிலைபேறான நகர அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் அனுராதபுரம் ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் குறை செயற்பாட்டிற்கு காரணத்தை கண்டறிந்து மாற்று வழியை நடைமுறைப்படுத்தல் |

## 3.9 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 மே மாதமளவில் கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டம் மீளளிப்புச் செய்யப்பட்ட ஐ.அ.டொ. 80.55 மில்லியனாக காணப்பட்டதுடன் திருத்தப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக தொடர்ந்தும் பெற்றுக் கொள்ளக்கூடிய கடன் தொகை ஐ.அ.டொ. 26.71 மில்லியன் ஆகும். எனினும் | நிலவும் ஒப்பந்தங்களிலிருந்து ஏற்படக் கூடிய சேமிப்புக்கள் மற்றும் ரூபாக்களின் எதிர்பார்த்த ரூபாவில் ஏற்பட்ட பெறுமதிகளின் இழப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு இலங்கை வங்கியால் இந்த சீராக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனால் தடைப்பட்டுள்ள அனைத்து உப செயற்திட்டங்களையும் முழுமையாக பூர்த்தி செய்வதற்கு போதியளவு | அங்கீகரிக்கப்பட்ட பண எல்லைகளினுள் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டப் பணிகள் நிறைவடையும் போது தொடர்ந்தும் நிறைவு செய்யப்படாத ஒப்பந்தங்களுக்காக செயற்திட்டத்திற்கு செலுத்துவதற்கு நேர்கின்ற தொகை ஐ.அ.டொ. 31.39 மில்லியன் ஆக மாத்திரம் என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக அண்ணளவாக ஐ.அ.டொ 4.68 மில்லியன் இலங்கை அரசிற்கு மேலதிக செலவின சுமையொன்றாக இடம்பெற்றுள்ளமை தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. | பணம் எம்மிடம் காணப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நகர மீளுருவாக்கல் செயற்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 1000 வீடுகளை கொண்டமைந்த ஸ்ரேடியம், வீடமைப்புச் நிர்மாண செயற்திட்டத்தின் ஒப்பந்தக் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் முற்பணமாக ரூபா 595 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அந்த பெறுமதியில் 60 சதவீதம் அதாவது ரூபா 357,057,000 ரூபாக்களில் மற்றும் எஞ்சிய 40 சதவீதமான ரூபா 238,038,000 ஆன பெறுமதியுடைய உடன்படிக்கையின் பிரகாரம் 2019 ஆகஸ்ட் 27 ஆந் திகதியில் உள்ளபடியான அந்நிய செலாவணி வீதமான ரூபா 176.00 ஆன நிலையான பெறுமதியொன்றின் அடிப்படையில் அமெரிக்க டொலர் 1,352,488.64 | ஒப்பந்ததாரருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஒப்பந்தத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதியின் பிரகாரம் விலைக்கேள்வி கோரி இணங்கியுள்ள ஒப்பந்தத்தினை வழங்கிய ஒப்பந்தப் பெறுமதி மற்றும் மதிப்பீட்டு பெறுமதியையும் விஞ்சிய கொடுப்பனவொன்று மற்றும் அரசிற்கு நட்டம் ஏற்படுகின்றமையால் அவ்வாறு அல்லாத வகையில் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப் படல் வேண்டும். |

பெறுமதிக்கு பரிமாற்றப்பட்டு வெளிநாட்டு கடனின் கீழ் மத்திய வங்கியின் டொலர் கணக்கில் அத்திகதியில் உள்ளபடியான வீதத்திற்கு ரூபா 250,475,486 ஆக செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு ரூபாயின் பெறுமதியில் நிலையான பெறுமதியொன்றின் அடிப்படையில் டொலர்களுக்கு மாற்றுவது மீண்டும் நடைமுறை டொலரின் பெறுமதியினை செலுத்தியமையின் காரணத்தால் ஒப்பந்தக் காரருக்கு ரூபா 12,437,486 கூடுதலாக முற்பணமாக செலுத்த நேர்ந்திருந்தது.

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2016 யூன் 10 ஆந் திகதிய நிதிப் பிரமாணம் 134(3) முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இலக்கம் 02/2016 இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை இணைத்துக் கொள்வதற்கு கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ஆரம்ப திகதி முதல் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |